சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.91/2023

09.02.2026

வா.சா.1 திரு. அன்பரசு, த/பெ. பொன்னுசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் யார் கடன் கேட்டாலும் கொடுத்து வாங்குவது தொழிலாக வைத்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதியை கடன் கொடுப்பதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எனக்கு நாச்சியார்கோவில் அருகேயுள்ள திருநரையூர் கிராமம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு நன்னிலம் அருகேயுள்ள சலிப்பேரி என்ற கிராமம் என்றால் சரிதான். பிரதிவாதி ஊருக்கு சரியாக ரோடு வசதியே இல்லை என்றால் சரியல்ல. ரோடு பழுதடைந்துள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் தான் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிசீட்டா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் குடும்ப செலவிற்காக பணம் தேவைப்படுவதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் ஒரு நபர் மட்டுமே சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். கடனுறுதிசீட்டிற்கு இரண்டு சாட்சிகள் வாங்கவேண்டும் என்ற அந்த விவரம் எனக்கு தெரியாது. கடனுறுதிசீட்டில் கண்ட தொகையை இரகசியமாக நானும் பிரதிவாதியும் கொடுத்து வாங்கிகொண்டோமா என்றால் இல்லை. 3 ஆம் நபராக சாட்சி கையொப்பம் போட்ட நபரும் இருந்தார். சாட்சிகள் கையொப்பம் போட்டுள்ள நபரின் கையொப்பத்திற்கு மேல் சாட்சிகள் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு சாட்சி மட்டும் கையொப்பம் போட்டதற்கு என்ன காரணம் என்றால் காரணம் எதுவுமில்லை. இரண்டு நபர்களிடம் தான் சாட்சி கையொப்பம் வாங்கவேண்டும் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி நான் கொடுத்த அறிவிப்பிற்கு பதில் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பதிலறிவிப்பில் புரோ நோட்டின் நகலை பிரதிவாதிக்கு அனுப்பவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பதிலறிவிப்பில் கடனுறுதிசீட்டு மோசடியானது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது உண்மையில்லை. பதிலறிவிப்பில் கண்டவாறு புரோ நோட்டின் நகலை நான் பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு

உள்ளூரில் விரோதிகள் அதிகம் உள்ளதால் அவர்களை வைத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை நான்தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஏற்பட்டபோது எனக்கும் சாட்சி கையொப்பம் போட்ட நபருக்கும் தெரியும் என்றால் சரிதான். பதிலறிவிப்பு பெற்ற பின்னிட்டு நான் பிரதிவாதியை நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. வங்கியில் தனிநபர் கடன் கொடுக்கும் போது ஆதார் வாங்குவார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் கடன் கொடுக்கும் போது ஆதார் அட்டை நகல் வாங்கினேனா என்றால் இல்லை. பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் உண்மையில் நான் கடன் கொடுத்திருந்தால் பிரதிவாதியின் ஆதார் அட்டையை வாங்கியிருப்பேன் என்றாலும் கடன் எதுவும் கொடுக்காததால்தான் ஆவணம் எதுவும் வாங்கவில்லைஎன்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்துவருகிறார். பிரதிவாதிக்கு பணம் தேவைப்பட்டிருந்தால் அவரின் கணவரிடம் வாங்கியிருப்பார் என்றாலும்முன் பின் தெரியாத என்னிடம் கடன வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் முன்பு தாவா கடனுறுதிசீட்டை நீதிமன்ற அனுமதி பெற்று படித்து பார்த்த பிறகு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடன் வாங்குவதற்கு பிரதிவாதி எனது ஊரான திருநரையூருக்கு வந்தாரா என்றால் ஆமாம். 12.11.2021 ல் கொரோனா பரவல் அதிகமாக இருந்த காரணத்தினாலும் பிரதிவாதி அப்போது வீட்டை விட்டு வந்திருக்க வாய்ப்பே இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு விவசாயத்திலிருந்து வந்த பணத்தை வீட்டில் வைத்திருந்தேன் அதிலிருந்து பிரதிவாதிக்கு ரூ.3,00,000/- ஐ கடனாக கொடுத்தேன். நான் கொடுத்த அறிவிப்பிலும் பிராதிலும் எனக்கு வருமானம் எப்படி வந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி மீது சொத்து சம்பந்தமாக மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி அவரின் ஊரில் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு விவசாயம் தவிர வேறு தொழில் இல்லை என்றால் சரிதான். எதனடிப்படையில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் பிரதிவாதியின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்ப்பவரை நம்பி பணம் கடன் கொடுத்தேன். இந்த விவரத்தை பிராதிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் போது யாரையாவது மூன்றாம் நபரை அழைத்து

வரச்சொன்னேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை பிடுங்கி கொள்வதற்காக உள்ளூரில் விரோதிகள் அதிகம் உள்ளார்கள் என்றாலும் அவர்களில் யாரோ ஒருவர் சொல்லி இந்த வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 12.11.2021 அன்று பிரதிவாதிக்கு ரூ.3,00,000/- கடன் கொடுத்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதால் தான் கடனுறுதிசீட்டை எழுதுவதற்கு ஆள் கிடைக்காமல் நானே எழுதினேன் என்றால் சரியல்ல. நான் யாருக்கு கடன் கொடுத்தாலும் கடனுறுதிசீட்டை நான்தான் எழுதுவேன். நான் கடன் கொடுத்த நபர்கள் மீது வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடன் பெற்றவர் கடனை திரும்ப செலுத்திவிட்டால் கடனுறுதிசீட்டை திரும்ப அவரிடம் கொடுத்துவிடுவேன். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்றால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் பொய்யான கடனுறுதிசீட்டின் அடிப்படையில் வழக்கை பொய்யாக நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.